FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

UNDER SECTION 173 BNSS

BNSS பிரிவு 173-ன் கீழ்

C 808625

05/AC/2025

1. District மாவட்டம் கரூர் PS கா.த.க.பிரிவு காவல்நிலையம் Year 2025 ஆண்டு FIR No. மு.த.அ. எண் Date நாள் 16.10.2025

2. (i) Act சட்டம்: PREVENCTION OF CORRUPTION ACT 1988 AS AMENDED IN 2018. AND 106 BNSS Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7.7 ச/w 12

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.10.2025 Date to : நாள் வரை 16.15 மணி முதல்

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 20.30 மணி வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2025 Time : நேரம் 22.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.10.2025 Time : நேரம் 15.30 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 45.கி.மீ. கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி குளித்தலை சார் பதிவாளர் அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. பெருமாள்

(b) Father's/~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் க. இராமலிங்கம்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1979

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் இளநிலை உதவியாளர்

(g) Address : முகவரி வட்டார கல்வி அலுவலகம் கிருஷ்ணராயபுரம். கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1, திருமதி. தி. சிருஷ் சார் பதிவாளர். குளித்தலை. 2, திரு. R. திருநாராமண் தலை. ராமசாமி, கணேசபுரம் அக்ரஹாரம், குளித்தலை வட்டம். கரூர்-மாவட்டம். 3. திரு. ர. கிருஷ்ணன். தலை. மகாலிங்கம். நடுப்பட்டி. கணேசபுரம் அஞ்சல் மருதூர். குளித்தலை. வட்டம். கரூர் மாவட்டம். 4, திரு. மணிகண்டன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தலை. கந்தன். தனி. 1/67. வடக்கு வீதி காவலி காரணமாக குளித்தலை வட்டம். கரூர் மாவட்டம். 5. திரு. D. ராஜலிங்கம். தலை. தர்ம -லிங்கம். மேட்டு மருதூர். குளித்தலை வட்டம். கரூர் மாவட்டம்.

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட கூட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் அடிப்புரோன் ..... பதவி தானை நிலை தனிநாள் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது. உ.த.க. எண் தேதி

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/10/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.10.2025 AT 1630hrs

Name: பெயர் க. சுமிநாதன்
Rank: நிலை ..... No. எண் .....
ஆய்வாளர், உ.த.க. எண் தேதி

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.5/AC/2025 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 of BNSS.

எதிரிகள்:

1) திருமதி.C.சுருதி,
குளித்தலை சார்பதிவாளர்,
குளித்தலை,
கரூர் மாவட்டம்.

2) திரு.R.சீதாராமன்,
த/பெ.ராமசாமி,
கணசேபுரம் அஞ்சல்,
மருதூர்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்

3) திரு.M.கிருஷ்ணன்
த/பெ மகாலிங்கம்,
நடுப்பட்டி,
கணசேபுரம் அஞ்சல்,
மருதூர்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்

4) திரு.மணிகண்டன்
த/பெ கந்தன்,
கதவு எண் 1/67,
வடக்கு தெரு,
காவல்காரன்பட்டி,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்

5) திரு.D.ராஜலிங்கம்
த/பெ தர்மலிங்கம்,
மேட்டுமருதூர்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்

சமர்ப்பிக்கப்படுகிறது :

கரூர் மாவட்டம், குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில், தொடர்பில்லாத தனி நபர்கள் பத்திர எழுத்தரின் உதவியாளர் மற்றும் சாட்சிகள் என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூலித்து அதனை குளித்தலை சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் வீட்டிற்கு செல்லும்போது கொடுத்து அனுப்புவதாக நம்பத்தகுந்த ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் 15.10.2025 ஆம் தேதி 14.15 மணிமுதல் 20.30 மணி வரை திரு.இரா.பெருமாள், த/பெ. க.இராமலிங்கம், இளநிலை உதவியாளர், வட்டார கல்வி அலுவலகம், கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டம் அவர்களுடன் நடத்திய திடீர் இணை ஆய்வின் அடிப்படையில் திரு.இரா.பெருமாள் அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/AC/2025 பிரிவு 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 மற்றும் பிரிவு 106 BNSS-ன்படி மார்ஜனில் கண்ட எதிரிகள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.இரா.பெருமாள், த/பெ.க.இராமலிங்கம், இளநிலை உதவியாளர், வட்டார கல்வி அலுவலகம், கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 15.10.2025-ம் தேதியன்று குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட போது கைப்பற்றிய கணக்கில் வராத பணம் ரூ.3,07,500/- மற்றும் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் - சம்மந்தமாக. பார்வை : திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள், நாள் 15.10.2025. இன்று 15.10.2025-ம் தேதியன்று நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது எங்கள் உயர் அலுவலரான கிருஷ்ணராயபுரம் வட்டாரக் கல்வி அலுவலர் அவர்கள் அறிவுரையின் பேரில் மதியம் சுமார் 02.00 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் திரு.சாமிநாதன் அவர்களிடம் அறிக்கை செய்த போது அவர் என்னிடம், கரூர் மாவட்டம், குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில், தொடர்பில்லாத தனி நபர்கள் பத்திர எழுத்தரின் உதவியாளர் மற்றும் சாட்சிகள் என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூலித்து அதனை குளித்தலை சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் வீட்டிற்கு செல்லும்போது கொடுத்து அனுப்புவதாக ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகவும், அதன் பேரில் குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும், திருச்சியில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்கள் உடனே வரமுடியாத காரணத்தால் என்னை அரசு சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார். தொடர்ந்து 15.10.2025-ம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் என்னையும், போலீஸ் குழுவினரையும் அழைத்துக் கொண்டு மதியம் சுமார் 03.30 மணி முதல் குளித்தலை சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியை நோட்டமிட்ட போது, அலுவலக வளாகத்தின் உட்பகுதியில் இடைத்தரகர்கள் பலரும் சாட்சிகள் என்ற பெயரிலும், பத்திரப்பதிவு எழுத்தரின் உதவியாளர்கள் என்ற பெயரிலும் பத்திரப்பதிவுக்காக வந்தவர்களிடம் பணம் வாங்கி தனித்தனியாகப் பிரித்துக் கொண்டும், சார் பதிவாளர் அலுவலகத்திற்கும், அருகில் இருந்த பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கும் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடிக் கொண்டிருந்தனர். உடனே ஆய்வாளர் உரிய தகவலரிடம் விசாரித்த போது பத்திரப்பதிவுக்காக வரும் பொதுமக்களிடம் மேற்குறிப்பிட்ட இடைத்தரகர்கள் லட்சக் கணக்கில் பணத்தை வாங்கி அவற்றை சார் பதிவாளருக்கும், அங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கும் வீட்டுக்குச் செல்லும் போது பிரித்துக் கொடுப்பதாகத் தெரிவித்தனர்.

எனவே, காவல் ஆய்வாளர் மாலை சுமார் 16.00 மணிக்கு என்னையும் போலீஸ் பார்ட்டியையும் அழைத்துக் கொண்டு, குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் நுழைந்து

திடீர் இணை ஆய்வு மேற்கொண்ட போது அலுவலக வளாகத்தில் நின்று பணத்தை எண்ணி பாக்கெட்டில் வைத்த சந்தேகத்திற்குரிய நபர்களான 1) திரு.R.சீதாராமன், த/பெ.ராமசாமி, கணசேபுரம் அஞ்சல், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் தனது டவுசர் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,00,000/, 2) திரு.M.கிருஷ்ணன் த/பெ மகாலிங்கம், நடுப்பட்டி, கணசேபுரம் அஞ்சல், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் தனது டவுசர் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.50,000/- மற்றும் திடீர் ஆய்வுக்குழுவினர் வந்தபின்னர் அலுவலகத்தின் உள்ளே வந்த 3) திரு.மணிகண்டன் த/பெ கந்தன், கதவு எண் 1/67, வடக்கு தெரு, காவல்காரன்பட்டி, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்ற ரியல் எஸ்டேட் புரோக்கர் தான் வைத்திருந்த கருப்புநிற கைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,50,000/-, 4) திரு.D.ராஜலிங்கம் த/பெ தர்மலிங்கம், மேட்டுமருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் தனது சட்டைப் பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.7,500/- ஆக மொத்தம் ரூ.3,07,500/- குறித்து சார் பதிவாளர் மற்றும் என் முன்னிலையில் விளக்கம் கேட்டபோது, அவர்கள் சரியான விளக்கம் சொல்லாமல் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிய காரணத்தால், மேற்குறிப்பிட்ட இடைத்தரகர்கள் பத்திரப்பதிவு செய்ய வந்தவர்களிடம் வசூலித்த மேற்குறிப்பிட்ட பணத்தை குளித்தலை சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் வீட்டிற்குச் செல்லும்போது லஞ்சமாகக் கொடுத்து அனுப்புவதற்காக அங்கு வந்ததாக ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் மேற்சொன்ன 4 நபர்கள் வைத்திருந்த மொத்தப் பணம் ரூ.3,07,500/-ஐ ஆய்வாளர் அறிவுரைப்படி நான் கைப்பற்றினேன். மேலும், மேற்குறிப்பிட்ட 4 இடைத்தரகர்கள் மற்றும் சார் பதிவாளர் ஆகியோர் தனித்தனியாக அளித்த வாக்குமூலங்கள் என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நேரத்தில் அரசு அலுவலகமான குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்தில் எவ்வித முகாந்திரம் இல்லாமல் வைத்திருந்த தொகையை கைப்பற்றியது தொடர்பாக இடைத்தரகர்களின் நடமாட்டத்திற்கு உடந்தையாக இருக்கும் 1) குளித்தலை சார்பதிவாளர் திருமதி.C.சுருதி மற்றும் இடைத்தரகர்கள் 2) திரு.R.சீதாராமன், த/பெ.ராமசாமி, கணசேபுரம் அஞ்சல், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் 3) திரு.M.கிருஷ்ணன் த/பெ மகாலிங்கம், நடுப்பட்டி, கணசேபுரம் அஞ்சல், மருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் 4) திரு.மணிகண்டன் த/பெ கந்தன், கதவு எண் 1/67, வடக்கு தெரு, காவல்காரன்பட்டி, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் 5) திரு.D.ராஜலிங்கம் த/பெ தர்மலிங்கம், மேட்டுமருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.3,07,500/- மற்றும் 1) தனிநபர் பணஇருப்பு பதிவேடு, 2) அமைச்சு பணியாளர் வருகை பதிவேடு, 3) DEO & IPC வருகைப்பதிவேடு, 4) திரு.மணிகண்டன் என்பவர் ஆஜர் செய்த சுத்த கிரைய சாசன வரைவுப்பத்திரம் (பக்கம்1 to 10), 5) சார்பதிவாளர் அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்து சான்றொப்பம் செய்து கொடுத்த A-Account, Dated. 15.10.2025 மற்றும் 6) சார்பதிவாளர் அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்து சான்றொப்பம் செய்து கொடுத்த கொடிநாள் இரசீது நகல்-2 மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கைக்காக தங்கள் வசம் ஒப்படைக்கிறேன். இப்படிக்கு, Sd/-(xxxxxxxx) திரு.இரா.பெருமாள், த/பெ.க.இராமலிங்கம், இளநிலை உதவியாளர், வட்டார கல்வி அலுவலகம், கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டம் நாள்:15-10-2025.

Sir, Received the Computer typed complaint on 15.10.2025 at about 22.00 hrs,. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.05/AC/2025 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 106 BNSS at 15.30 hrs on 16.10.2025. Sd/-(xxxxxxxx) 16.10.2025. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original complaint of Tr.R.Perumal, S/o K.Ramalingam, Junior Assistant, O/o the Block Education Officer, Krishnarayapuram, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

16/10/25

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.